## ஒதுக்கீட்டுத் தலைப்பு 160 – சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு

இவ்வறிக்கை இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1. **பகுதி – அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்களது கணக்குகள் தொடர்பான பொழிப்பறிக்கை**
2. **பகுதி – ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குரிய விரிவான அறிக்கை**

## 1 ஆம் பகுதி

**சுற்றாடல் மற்றும் புனருத்தாரண வலு அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்களது கணக்குகள் தொடர்பான பொழிப்பறிக்கை**

### 1. அமைச்சின் கீழான திணைக்களம்

| செலவினத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 283 | வன வளப் பாதுகாப்புத் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

### (அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

அமைச்சிற்கும் அமைச்சின் கீழான திணைக்களத்திற்குமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 3,472,106,000 ஆகும். மீளாய்வாண்டு முடிவில் அதில் ரூபா 2,284,597,540 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதியேற்பாட்டில் சேமிப்பு ரூபா 1,110,883,550 முதல் ரூபா 76,624,910 வரை, அதாவது, மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 50.3 சதவீதம் மற்றும் 6.05 ஆகவிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய நிதியேற்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டுவருவன | மூலதனம் | மீண்டுவருவன | மூலதனம் | மீண்டுவருவன | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 160 | சுற்றாடல் மற்றும் புனருத்தாரண வலு அமைச்சு | 566,091,000 | 1,640,065,000 | 514,998,996 | 580,273,454 | 51,092,004 | 1,059,791,546 |
| 283 | வன பாதுகாப்புத் திணைக்களம் | 852,700,000 | 413,250,000 | 814,409,854 | 374,915,236 | 38,290,146 | 38,334,764 |
| | மொத்தம் | 1,418,791,000 | 2,053,315,000 | 1,329,408,850 | 955,188,690 | 89,382,150 | 1,098,126,310 |

## 2.2 வருமானக் கணக்குகள்

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

வன பாதுகாப்புத் திணைக்களத்தால் 2012 ஆம் ஆண்டில் இரு வருமானக் குறியீடுகளின் கீழ் ரூபா 1,025,000,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 817,802,166 ஆகும். அதற்கமைய, மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 79.8 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் வருமாறு.

| வருவாய்க் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமான குறியீடு | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | (குறைவாக)/ கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| வன பாதுகாப்பு நாயகம் | 1003:07:03 | 150,000,000 | 59,386,598 | (90,613,402) | 60.4 |
| வன பாதுகாப்பு நாயகம் | 2002:01:02 | 875,000,000 | 758,415,568 | (116,584,432) | 13.3 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றம் விதித்துள்ள எல்லைகள்**

அமைச்சிற்கும் அமைச்சின் கீழான திணைக்களத்திற்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்கென பாராளுமன்றம் விதித்துள்ள கீழே குறிப்பிடப்பட்ட எல்லைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

| தலைப்பு | விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியானது | அதிகுறைந்த எல்லை | உள்ளபடியானது | அதிகூடிய எல்லை | உள்ளபடியானது |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 160 | 16001 | 11,000,000 | 8,810,052 | 5,500,000 | 11,091,435 | 50,000,000 | 27,062,765 |
| 283 | 28301 | 75,000,000 | 52,584,305 | 45,000,000 | 63,668,129 | 298,500,000 | 241,809,722 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.4.1 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களத்தில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்குகளில் இருந்த வரவு மீதி ரூபா 25,229,756 ஆகும். விபரம் வருமாறு.

| அமைச்சு / திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி வரவு/ (செலவு) |
|---|---|
| | ரூபா |
| சுற்றாடல் மற்றும் புதுபிக்கத்தக்க வலு அமைச்சு | 260,361 |
| வனபாதுகாப்புத் திணைக்களம் | 24,969,395 |
| | 25,229,756 |

### 2.4.2 பொது வைப்புக் கணக்கு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சினதும் திணைக்களத்தினதும் பொது வைப்புக் கணக்கு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 24,894,497 ஆகும். அவை தொடர்பான விபரம் கீழே காணப்படுகின்றது.

| அமைச்சு/ திணைக்களம் | கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| சுற்றாடல் மற்றும் புதுபிக்கத்தக்க வலு அமைச்சு | 6000/000/00/0015/0070 | 12,611,878 |
| வன பாதுகாப்புத் திணைக்களம் | 6000/000/00/0015/0138 | 12,282,619 |
| மொத்தம் | | 24,894,497 |

## 02 ஆம் பகுதி

### ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விரிவான அறிக்கை

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 160 – சுற்றாடல் மற்றும் புதுபிக்கத்தக்க வலு அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சுற்றாடல் மற்றும் புதுபிக்கத்தக்க வலு அமைச்சு 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதியன்று அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புரைகள், கருத்துரைகளும்

கண்டுபிடிப்புகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரிச் செவ்வையின் அடிப்படையில் அமைந்தனவாகும். அம் மீளாய்வினதும் பரிசீலனையினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் நேரம் எனும் வரையறைக்குட்பட இயன்றளவு விரிவான கணக்காய்வை மேற்கொள்ளும் விதத்தில் தயாரிக்கப்பட்டனவாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148,149,150,152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கேற்ப பேணப்படுதல், தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களற்ற கணக்குகள் மற்றும் கணக்கீட்டுக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நியாயபூர்வமாகச் சமர்பித்தலுக்கான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், அமுலாக்குதல், பேணுதல் யாவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.3 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கை மற்றும் ஏடுகள் என்பவற்றின் பிரகாரம் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் கணக்கிணக்கக் கூற்று, இங்கு (அ) முதல் (ஈ) வரையிலான பொது அவதானிப்புகள் மற்றும் கீழே 1:4 முதல் 1:11 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்படும் பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் நீங்கலாக திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டது.

(அ) பாதீட்டு முரண்கள்

(i) 11 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 299,300,000 மொத்த தேறிய ஏற்பாடும் சேமிப்பிற்குள்ளாகியது.

(ii) 21 செலவின விடயங்களுக்குக் கூடுதலாக நிதியேற்பாடு செய்யப்பட்டமையால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்தியதன்

பின்னர் எஞ்சிய தொகை அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் நூற்றுக்கு 50 சதவீதத்துக்கும் 97 சதவீத்துக்கும் இடையே அமைந்திருந்தது.

(iii) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட் வளி நிலைமை முகாமைத்துவம் மற்றும் சர்வதேச ஒருங்கிணைப்புப் பிரிவின் 8 செயற்பாடுகள் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 4,280,000 தொகையான ஏற்பாடு உயிரின பல்லினப் பிரிவின் 3 செயற்பாடுகள் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 490,000 தொகையான ஏற்பாடு ரூபா 391,310 ஆலும், ரூபா 4,764,500 ஆலும் காலநிலை வேறுபாட்டுப் பிரிவின் 7 செயற்பாடுகள் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 47,320,000 தொகையான ஏற்பாடு ரூபா 5,373,890 ஆலும் திட்டமிடல் அபிவிருத்திப் பிரிவின் 3 செயற்பாடுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 750,000 தொகையான ஏற்பாடு ரூபா 3,975,330 ஆலும் அதிகரித்துப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) கட்டு நிதிக் கணக்கு

2007 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவி வரும் ரூபா 260,361 கட்டு நிதி மீதியானது 2013 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பான கணக்கிணக்கக் கூற்று

விடய இலக்கம் 16001 எனும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம், அத்தினத்தன்று அறவிடப்பட வேண்டியிருந்த மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 379,660 ஆகும். அந்நிலுவை மீதியை அறவிடுவதற்கான தொடர் நடவடிக்கை நலிவுற்ற நிலையில் இருந்தது.

## 1.4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளதும் செயலாளர்கள், மாகாண சபைப் பிரதான செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள் என்பவர்களுடன் தொடர்புபடுத்தப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய, 2010 ஆம் ஆண்டு தொடக்கம் எதிர்வரும் 3 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் ஆண்டின் ஆரம்பத்தில் அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டியபோதிலும், அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்படாதிருந்தது.

### 1.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியபோதும், சுற்றறிக்கையிலுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய கொள்வனவுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுக் கூறு பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் அடங்கலாக 5 உத்தியோகத்தர்களைக் கொண்டிருந்தது. 2012 ஆம் ஆண்டில் 10 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும், 2012 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் அமைச்சிற்குச் சொந்தமான கீழே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களது கணக்காய்வுப் பணிகள் சேர்த்துக் கொள்ளப்பட்ட போதும், ஆண்டின்போது அந்நிறுவனங்களில் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(அ) அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
(ஆ) மத்திய சுற்றாடல் அதிகார சபை
(இ) ‘‘பிலிசறு’’செயற்திட்டம்
(ஈ) புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்

## 1.5 சொத்து முகாமைத்துவம்

### (அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

அமைச்சிற்குரிய 4 வாகனங்கள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 3 முதல் 21 மாதங்கள் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வெளி நபர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

அமைச்சினால் 4 வாகனங்கள் முறையற்றவாறு வெளி நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறு.

| | சொத்தின் தன்மை | சொத்துக்களின் எண்ணிக்கை | சொத்து வழங்கப்பட்ட நிறுவனம் | பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | ரூபா |
| (i) | ‘‘இசுசு’’ டபள் கெப் | 02 | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | குறிப்பிடப்படவில்லை |
| (ii) | ‘‘டொயொடா’’ டபள்கெப் | 02 | சமய விவகார மற்றும் நல்லொழுக்க அமைச்சு | குறிப்பிடப்படவில்லை |

**(இ) பிற நிறுவனங்களுக்குரிய சொத்துக்களை முறையற்றவாறு பயன்படுத்தல்**

பிற நிறுவனங்களுக்குரிய 2 வாகனங்கள் முறையான அங்கீகாரமின்றி அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்டன. விபரம் வருமாறு.

| | சொத்தின் தன்மை | சொத்துக்குரிய நிறுவனம் | பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| (i) | ‘‘பர்ஜோ’’ கார் | அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் | சமர்ப்பிக்கப்படவில்லை |
| (ii) | ‘‘சுஹாறு’’ ஜீப் | வன பாதுகாப்புத் திணைக்களம் | சமர்ப்பிக்கப்படவில்லை |

**1.6 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

நிதிப் பிரமாணம் 104 இற்கமைய இழப்புகளுக்குப் பொறுப்பானவர்களை உறுதிசெய்ய வேண்டுமாயினும், 3 வாகனங்களுக்கு ஏற்பட்ட ரூபா 629,978 இழப்பு தொடர்பாகப் பொறுப்பானவர்கள் உறுதி செய்யப்படவில்லை.

**1.7 செயற்திட்டங்களை அமுலாக்குவதில் நலிவுகள்**

**செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் அமைச்சினால் தாமதம் ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பித்த திகதி | முடிவுற வேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| பன்னல மாதிரி நகரை உருவாக்குதல் | 10,000,000 | 2011.10.12 | 2012.02.12 | 11,689,995 | சாதாரண விளையாட்டு மைதானமாக அபிவிருத்தி செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட போதும் பின்னர் கிரிகட் விளையாட்டிற்கு ஏற்ற கிரிக்கட் மைதானமாக அதனை அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டமை. |

**1.8 செயற்திறன்**

2012 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் முன்னேற்றம் தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) போதியளவு நிறைவேறாத பிரதான பணிகள்

(i) பிரதான பணிகளை அமைச்சு போதியளவு நிறைவேற்றாததுடன் அவ்வாறாக அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் சில கீழே காணப்படுகின்றன.

| **செயற்திட்டத்தின் பெயர்** | **ஏற்பாடு செய்த நிதி** | **உள்ளவாறான செலவினம்** | **அவதானிக்கப்பட்டவை** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | |
| வளி நிலைமை முகாமைத்துவம் மற்றும் சர்வதேச ஒருங்கிணைப்புப் பிரிவு | 51,500,000 | 15,085,200 | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கும் 64 பணிகளுக்கு ரூபா 51,500,000 நிதியேற்பாடு செய்யப்பட்ட போதும், அதில் 22 பணிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்தத் தொகையான ரூபா 17,985,100 சேமிப்புக்குள்ளாகியது. |
| சுற்றாடல் திட்டமிடல் பிரிவு | 52,000,000 | 2,399,000 | ஹரித கவய மற்றும் சுற்றாடல் கிராம நிகழ்ச்சித் திட்டம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அதற்கான நிதியேற்பாடு ரூபா 19,000,000 ஆகும். அதன்பொருட்டு செலவு எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறல்லாத பணிகளுக்கு ரூபா 16,405,000 செலவிடப்பட்டிருந்தது.<br><br>சுத்த நகர நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான 07 பணிகளில் 06 |

| | | | |
|---|---|---|---|
| | | | பணிகளுக்கான நிதியேற்பாட்டில் 90 முதல் 100 சதவீதமான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |
| உயிரின பலவகைமைப் பிரிவு | 32,200,000 | 8,458,550 | 84 பணிகளுக்கு ரூபா 32,200,000 நிதியேற்பாடு செய்யப்பட்ட போதும், அவற்றுள் 20 பணிகளுக்கான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது.<br><br>செயல் நடவடிக்கைத் திட்டில் அடங்கிய 04 நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| காலநிலை விபரீதப் பிரிவு | 49,715,000 | 31,164,947 | இந் நிதியேற்பாடு 60 பணிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட போதும், 20 பணிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 7,312,000 மொத்தமாக எஞ்சியிருந்தது. |
| திட்டமிடல் அபிவிருத்திப் பிரிவு | 12,900,000 | 6,615,190 | 09 பணிகளுக்கான மொத்த நிதியேற்பாடு ரூபா 2,530,000 எஞ்சியிருந்தது. |
| மேம்பாட்டு அபிவிருத்திப் பிரிவு | 1,000,000 | 495,000 | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கிய 02 பணிகள் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட நிதி எஞ்சியிருந்தது. |

(ii) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கும் பணிகளுக்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்களது பெயர்கள் அறிவிக்கப்பட வில்லை.

(ஆ) திட்டமிடல்

--------------------

கீழே குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களில் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கமையச் செயற்படாமை அவதானிக்கப்பட்டது.

| | |
|---|---|
| வளி நிலைமை முகாமைத்துவம் மற்றும் சர்வதேச ஒருங்கிணைப்புப் பிரிவு | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத பணிகளுக்கு ரூபா 971,650 செலவிடப்பட்டிருந்தது. |
| உயிரின வேறுபாட்டுப் பிரிவு | செயல் நவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்காத 13 பணிகளுக்கு ரூபா 2,230,750 செலவிடப்பட்டிருந்தது. |
| இயற்கை வளப் பிரிவு | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்காத பணிகளுக்கு ரூபா 495,000 செலவிடப்பட்டிருந்தது. |

## 1.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவாறிருந்தன. அவ்வாறாக அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தொகைக்கு அதிகமாக 2012 ஒக்டோபர் 30 ஆந் திகதியளவில் ரூபா 4,050,302 க்கான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், கொள்வனவுக் குழுவின் அங்கீகாரமின்றி ரூபா 1,899,112 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா 20,000,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் அத்தொகைக்கு எல்லைக்கு மேலாக வேறு 5 செலவின விடயங்களிலிருந்து எரிபொருள் மற்றும் போக்குவரத்து, இணைந்த படி உபசரிப்புச் செலவினம், நிழற்படப் பிரதி என்பவற்றிற்கு ரூபா 396,937 செலவிடப்பட்டிருந்தது.

(இ) உலக சுற்றாடல் தினத்தைக் கொண்டாடுவதற்காக ரூபா 5,500,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டு அதில் ரூபா 2,983,102 செலவிடப்பட்டிருந்தது. இதன் மூலம்

புதினப் பத்திரிகை விளம்பரங்களுக்கு 65 சதவீதமான ரூபா 1,925,520 செலவிடப்பட்டிருந்தது. 3 பிரதான பணிகளான பிங்கிரிய மத்திய நகரை விருப்பிற்குரிய நகராக அபிவிருத்தி செய்தல், தேசிய பாடசாலை அபிவிருத்தி மற்றும் மர நடுகைப் பணிகள் போன்றவற்றிற்கு ரூபா 4,250,000 வழங்கப்பட்டபோதும், அவை நிறைவேறியிருக்கவில்லை. மேலும், சுற்றாடல் தினத்தோடு இணைந்தவாறு பிரேசில் நாட்டில் நடைபெற்ற (Ri0 + 20) நிகழ்ச்சித்திட்டத்திற்கு வேறு செலவின விடயங்களிலிருந்து ரூபா 1.067 மில்லியன் விமானப் பயணச் சீட்டுக்களைப் பெறுதல் ஊடகவியலாளர்களுக்கு 80 pen drive கொள்வனவு செய்தல், ஞாபகார்த்த உறைகள், தனிப்பட்டோருக்கான முத்திரைகள் என்பவற்றிற்குச் செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) வளி நிலைமைத் தொடர் நடவடிக்கை நிலையங்கள் நான்கைக் கொள்வனவு செய்வதற்கு திறைசேரி ரூபா 120,000,000 நிதியேற்பாடு செய்திருந்தது. எனினும், கொள்வனவுகள் நடைபெற்றிருக்கவில்லை. அதன் காரணமாக சுற்றாடலில் உள்ள வளியின் நிலைமையைக் கண்காணிக்கும் வேலை தடைப்பட்டிருந்தது.

## 1.10 முகாமைத்துவ நலிவுகள்

அமைச்சுடன் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ள கணக்காய்வுப் பந்திகள் அரசாங்க கணக்குக் குழுவினால் பரிசீலனைக்குள்ளாகியதையடுத்து, தொடர் நடவடிக்கைகள் முடிவுறாதிருந்த பந்திகள் தொடர்பான விபரம் வருமாறு.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் | அரசாங்க கணக்குக் குழுக் கூட்டம் நடைபெற்ற திகதி | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | | | |
| 2008 | 7(ஈ) | செயற்பாட்டு வினைத்திறமையின்மை | 2013.03.06 | இலஞ்ச ஊழல் மோசடி தொடர்பான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2005,2006 ஆம் ஆண்டுகளில் அமுலாகிய உலகளாவிய சுற்றாடல் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் முறையற்ற விடயங்கள் தொடர்பாக அறிக்கை ஒன்றை வழங்குதல் | | ஆணைக்குழுவினால் இதனை ஆராய்ந்து தேவையான குற்றப் பத்திரிகையை விரைவில் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| 2008 | 5(இ) | வெளி நபர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள் செப்பிரோகார், டொயோடோ கெப் என்பன | 2013.03.06 | குறித்த அமைச்சருக்குத் தெரிவித்தல், அவ்வாகனங்களை மீளப் பெறுவதற்கோ அல்லது ஒப்படைக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2008 | 4.2(ஆ) | கடன் மீதி நிலுவை. தீர்த்து வைக்கப்படாத வெளிநாட்டுப் பயண முற்பணம் ரூபா 260,361 | 2013.03.06 | சட்டமா அதிபரின் ஆலோசனையைத் துரிதமாகப் பெற்று கடன் பணத்திற்கு பிணையாக வழங்கப்பட்ட காணியை விற்பதன் மூலம் கடனை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை. |
| 2011 | 4.3(அ) | கட்டு நிதிக் கணக்குகள் | 2013.03.06 | முற்பணத்தைப் பெற்ற அமைச்சரின் பிரத்தியேக செயலாளரிடம் அத்தொகையைத் தீர்த்து வைக்குமாறு வேண்டுவதற்கும் அதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் அது தொடர்பாகக் குறித்த அமைச்சருக்கு அறிவித்தலும் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 2011 | 5(இ) | பிற நிறுவனங்களுக்குரிய சொத்துக்கள் | 2013.03.06 | குறித்த வாகனங்களைச் சுவீகரிப்பதற்கோ அல்லது |

ஒப்படைப்பதற்கோ துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.11 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேட்ட மட்டம் | 45 | 27 | 18 | - |
| (ஆ) | மூன்றாம் மட்டம் | 37 | 36 | 01 | - |
| (இ) | இரண்டாம் மட்டம் | 124 | 81 | 43 | - |
| (ஈ) | ஆரம்ப மட்டம் | 76 | 54 | 22 | - |
| (உ) | ஏனையோர் (சமயாசமய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 10 | - | 09 |
| | மொத்தம் | 283 | 208 | 84 | 09 |

கீழே குறிப்பிடப்பட்டவை அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு முடிவில் 84 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இவற்றிற்கு புறம்பாக, பட்டதாரிப் பயிலுநர் நிகழச்சித் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட 51 பட்டதாரிப் பயிலுநர் உத்தியோகத்தர்கள் அமைச்சில் பணியாற்றுவதற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 283 – வன வளப் பாதுகாப்புத் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வன பாதுகாப்புத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, கணக்கிணக்கக் கூற்று, ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டு கணக்கு மற்றும் வருமானக் கணக்குகள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 23 ஆந் திகதியன்று வனப் பாதுகாப்பு நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புரைகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களது தெரிவுச் செவ்வைகளின் அடிப்படையிலானவை. அம் மீளாய்வினதும் பரிசீலனைகளினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்னும் வரையறைக்குட்பட விரிவான கணக்காய்வை மேற்கொள்ளக்கூடியவாறு தயாரிக்கப்பட்டனவாகும்.

### 2.2 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகியோரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்று மற்றும் கணக்கிணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148,149,150,152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கேற்ப பேணப்படுதல், தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரதும் கணக்கீட்டு உத்தியோகத்தரதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களற்ற கணக்குகள் மற்றும் கணக்கீட்டுக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நியாயபூர்வமாகச் சமர்பித்தலுக்கான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், அமுலாக்குதல், பேணுதல் யாவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

### 2.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் வன பாதுகாப்புத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் என்பன இங்கே(அ) முதல் (ஈ) வரையான பொது அவதானிப்புகள் மற்றும் கீழே 2.4 முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் தவிர, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன வென்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

கூடுதலாக நிதியேற்பாடு செய்யப்பட்டதன் விளைவாக 7 செலவின விடயங்களுக்கான நிதியைப் பயன்படுத்தியதன் பின்னர் எஞ்சிய தொகை தேறிய நிதியேற்பாட்டில் 10 முதல் 63 சதவீதமாக அமைந்நதிருந்தது.

**(ஆ) பொது வைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 12,282,619 ஆகும். அது தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) இலங்கை தொழில்நுட்ப சேவையின் பயிற்றுவிக்கும் தரத்தில் வன உத்தியோகத்தர்கள் (தமிழ் மொழி மூலம்) ஆட் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான பரீட்சைக்கு 67 பேர் விண்ணப்பித்திருந்தனர். அதற்கான பரிட்சைக் கட்டணமாக ஒவ்வொருவரிடமும் ரூபா 300 வீதப்படி ரூபா 20,100 அதிகூடிய தொகை பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டியபோதும், 2010 முதல் 2012 வரை அப் பரீட்சைக் கட்டணமாக ரூபா 29,400 பொது வைப்புக் கணக்கில் தேங்கியிருந்தது.

(ii) மேற்படி வைப்பிற்குப் புறம்பாக, எப் பரீட்சைக்கான கட்டணம் எனக் தெளிவாகக் குறிப்பிடப்படாது ரூபா 4,800 உம் பொது வைப்புக் கணக்கில் தேங்கியிருந்தது.

(இ) வமானக் கணக்கு

(i) வருமானக் குறியீடு : 2002:01:02 அரசாங்க வனங்களிலிருந்து பெறும் வருமானம்

- மதிப்பிடப்பட்ட வருமானமும் உள்ளவாறான வருமானமும்

  முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 840,000,000 ஆகும். தேறிய வருமானம் ரூபா 1,399,283,630 ஆகும். அது மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட 67 சதவீதம் அதிகமானதாகும். எனினும் மீளாய்வாண்டினது மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 875,000,000 என மதிப்பிடப்பட்டிருந்தது. தேறிய வருமானம் ரூபா 758,415,568 ஆகக் காணப்பட்டது. அதற்கமைய, மதிப்பிடப்பட்ட வருமானத்திலும் பார்க்க வருமானக் குறைவு ஏறக்குறைய 13 சதவீதமாக இருந்தது. அது முன்னைய ஆண்டின் தேறிய வருமானத்தை விட ஏறக்குறைய 46 சதவீதம் குறைந்ததாகும்.

- நிலுவை வருமானம்

  கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டு முடிவில் மொத்த வருமான நிலுவை ரூபா 765,450,575 ஆகும். அவ்வருமான நிலுவையில் ஏறக்குறைய 13 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 96,314,276 மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது நிலுவையாக உள்ள வருமானத்தில் 14 சதவீதம் பெறப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் மேலும் ரூபா 563,427,145 பெறப்பட வேண்டியிருந்தது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திலிருந்து அரசிறையாக ரூபா 560,288,680 மாத்தளை மாவட்டச் செயலகத்திலிருந்து ரூபா 1,227,000 பொலநறுவை மாவட்டச் செயலகத்திலிருந்து ரூபா 1,860,400 என்பனவும் நிலுவையாக உள்ள வருமானத்தில் அடங்கியிருந்தன.

- அரசிறையை அறவிடுதல்

  அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திடமிருந்து திணைக்களம் பெறவேண்டிய அரசிறை மற்றும் அரசாங்க மரக் கூட்டுத்தாபன நிதிக்கூற்றுக்களில் வன பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய அரசிறை என்பவற்றிற்கிடையே கீழே குறிப்பிடப்பட்டவாறு ரூபா 82,717,357

வேறுபாடு வெளியாகியது. அதனைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | அரசாங்க மரக்கூட்டுத்தாபன நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | வன பாதுகாப்புத் திணைக்களத்தின் ஏடுகளுக்கமைய |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| ஆரம்ப மீதி (2012.01.01 இல் உள்ளவாறு) | 142,217,074 | 252,902,701 |
| திறைசேரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவழிப்பு | 96,314,276 | 96,314,276 |
| | 45,902,798 | 156,588,425 |
| 2012 ஆம் ஆண்டிற்கான அரசிறை | 861,372,664 | 919,409,410 |
| | 907,275,462 | 1,075,997,835 |
| 2012.12.31 இல் உள்ளவாறான மீதி | 474,283,658 | 560,288,674 |
| ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட பெறப்பட்ட தொகை | 432,991,804 | 515,709,161 |
| வேறுபாடு | | 82,717,357 |

(ii) வருமானக் குறியீடு : 10:03:07:03 – தனியாார் மரப் - போக்குவரத்து

- மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்

  மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 150,000,000 ஆகும். தேறிய வருமானம் ரூபா 59,386,598 ஆகும். அதற்கமைய, மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 40 சதவீதம் மாத்திரமே பெறப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டில் அது 41 சதவீதமாக இருந்தது. இதன் படி மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் கிடையே பெரிதளவு வேறுபாடு ஏற்பட்டமையால் மதிப்பீட்டைத் தயாரிக்கையில் நி.பி 128 (2) ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்படாது போனமை புலனாயிற்று.

- வருமான நிலுவை அறிக்கை

  நி.பி 176(1) க்கமைய வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரால் நி.பி 128(2) இற்கேற்ப அரசிறை நிலுவை தொடர்பான அரையாண்டு அறிக்கை ஜுலை 31 மற்றும் அடுத்துவரும் ஆண்டின் ஜனவரி 31 க்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருமான நிலுவையின் உள்ளடக்கத்தைக் குறிக்கும் வருமானப் பதிவேடும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக் கூற்று

விடய இலக்கம் 28301 எனும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கிணக்கக் கூற்றுக்கமைய அத்தினத்தில் உள்ளவாறு நிலுவையாக உள்ள மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 10,639,829 ஆகும். அந்நிலுவை மீதியை அறவிடுவதிலான தொடர் நடவடிக்கைகள் நலிவுற்றிருந்தன.

## 2.4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 2.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளதும் செயலாளர்கள், மாகாண சபைப் பிரதான செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள் என்பவர்களுடன் தொடர்புபடுத்தப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய, 2010 ஆம் ஆண்டு தொடக்கம் எதிர்வரும் ஆகக் குறைந்தது 3 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் திணைக்களத்தால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்படாதிருந்தது.

### 2.4.2 வருடாந்த செயற்திறன் அறிக்கை

மேற்படி (2.4.1) இல் குறிப்பிடப்பட்ட பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) எனும் பொது நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் திணைக்களம் தயாரிக்க வேண்டிய வருடாந்த செயற்திறன் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பிரதி ஒன்றுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்குரிய செயற்திறன் அறிக்கை 2013 ஒக்டோபர் 07 ஆந் திகதியன்றே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

### 2.4.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த தினத்தில் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படாது 2013 மார்ச் 14 ஆந் திகதியன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

### 2.4.4 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுக் கூறு ஒன்று ஸ்தாபிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் மாத்திரமே அக்கூறில் சேவையில் ஈடுபட்டிருந்தார். இலங்கை முழுவதிலும் வலய மாவட்ட வன அலுவலகங்கள் அமைக்கப்பட்டும் வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 1,262,950,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தும் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின்

நடவடிக்கைகளைக் கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வுப் பதவியணி போதுமானதாக அமையாததால் ஆக்கபூர்வமான உள்ளகக் கணக்காய்வு நடைபெறவில்லை.

## 2.5 சொத்து முகாமைத்துவம்

### (அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

1997 ஆம் ஆண்டினது எல்லைகள் மீளப் பரிசீலனைக்குள்ளாகியபோது கண்டி உடவத்த வனப் பாதுகாப்புப் பிரதேசத்தில் 90 பேர்ச் காணி தனியார் ஹோட்டல் கம்பனி ஒன்றினால் அத்துமீறிப் பயன்படுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. 2002 ஆம் ஆண்டில் அக் காணிக்கான மதிப்பு ரூபா 11,750,000 என விலை மதிப்புத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடத்தல்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/பொருள் மெய்மையாய்வுச் சபை/01 எனும் பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் திருத்தஞ் செய்யப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கைக்கமைய வருடாந்த பொருட்கணிப்பு 2013 மார்ச் 31 க்கு முன்னர் நடைபெற்று அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டும். எனினும், திணைக்களம் பொருள் மெய்மையாய்வு அறிக்கையைக் கணக்காய்விற்கு 2013 ஒக்டோபர் 25 ஆந் திகதியன்றே சமர்ப்பித்திருந்தது.

## 2.6 இணங்காமை

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுக் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) தாபன விதிக்கோவை | | |
| (i) அத்தியாயம் XIX 5.2.1 ஆம் பந்தி | 122,291 | தெபானமவில் அமைந்துள்ள வன பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டிடத்தில் வனப் பாதுகாவலர் (ஆளணி மற்றும் நிர்வாகம்) மற்றும் அவரது குடும்பத்தினர் 2011 மே 27 முதல் வாழ்ந்து வருவதுடன் இதன் பொருட்டு உத்தியோகத்தரின் சம்பளத்தில் 12 சதவீதம் மனை வாடகையாக அறவிடப்படாதிருந்தது. |
| (ii) அத்தியாயம் XIX 5.8 ஆம் பந்தி | 108,365 | குடியிருக்கும் உத்தியோகத்தரால் நீர், மின்சாரக் கட்டணங்கள் என்பன செலுத்தப்பட வேண்டியபோதும், வனப் பாதுகாவலர் (ஆளணி மற்றும் நிர்வாகம்) குடியிருக்கும் மனையின் 2011 மே 27 முதல் நவம்பர் வரையான ரூபா 54,299 மின் கட்டணமும் ரூபா 54,066 நீர்க் கட்டணமும் களுத்துறை மாவட்ட வன அலுவலகத்தால் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) நிதிப் பிரமாணம் | | |
| (i) நி.பி 104(1) | 9,406,899 | வாகன மற்றும் ஏனைய நட்டங்கள் அல்லது இழப்புகளின் போது உடனடியாக அதன் அளவும் காரணமும் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதற்குப் பொறுப்பானவர்கள் நிர்ணயிக்கப்படுவதற்காக அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டும். எனினும், அவ்வறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நி.பி 325 | கணிப்பிட முடியவில்லை | தலைமை அலுவலக விற்பனை நிலையத்தில் சேகரிக்கப்படும் பணம் தொடர்பாக அவ்வப்போது சரி, பிழை பார்க்கப்படவேண்டுமாயினும், நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் ஒருவரால் அவ்வாறெதுவும் நடைபெற வில்லை. |
| (iii) | நி.பி 754 மற்றும் 751 என்பன | கணிப்பிட முடியவில்லை | நாற்றுகளைப் பொறுப்பேற்பதற்கும் அவற்றை வழங்குவதற்கும் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டுமாயினும், அவ்வாறான பொருட் பதிவேடு அல்லது அவ்வாறான மாதிரிப் படிவங்கள் எதுவும் பயன்படுத்தப்பட்டு கையிருப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நி.பி 756 | கணிப்பிட முடியவில்லை | வருடாந்த பொருட் கணிப்பை மேற்கொள்ளும்போது வன பாதுகாப்புத் திணைக்களத்திடம் உள்ள நாற்றுக்களைக் கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக ஆண்டின் இறுதியிலான நாற்றுக்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் திணைக்களத்திடம் இருக்க வில்லை. |

## 2.7 செயலாற்றல்

**போதியளவு நிறைவேறாத பிரதான பணிகள்**

பிரதான பணிகளைத் திணைக்களம் போதியளவு நிறைவேற்றிராததுடன் அவ்வாறாக அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

**தனியார் துறை பங்களிப்புடனான வனப் பயிர்ச்செய்கை**

(அ) விரைவாகக் குறைத்து செல்லும் இலங்கையின் வனாந்தர அளவு அதிகரிப்படுவதற்கான நோக்குடன் திணைக்களத்திடம் உள்ள கவனிப்பாரற்ற காடுகள் மற்றும் புதர் சூழ்ந்த காணிகள் என்பவற்றில் பயிரிடுவதற்கு தனியார் துறை ஒன்றுடன் 30 ஆண்டு காலக் குத்தகைக்கு வழங்குவது 2000 ஆம் ஆண்டில் ஆரம்பமாகியது. செயற்திட்டத்தின் I ஆம் கட்ட வேலை ஆரம்பமாகி 11 ஆண்டுகளில் மொத்த உடன்படிக்கை அளவில் 54 தொடக்கம் 14 வரையான குறைவு ஏற்பட்டிருந்ததுடன் தனியார் துறை பேணிவரும் காணியிள் அளவு 506 ஹெக்டயரிலிருந்து 137 ஹெக்டயர் வரை குறைவடைந்தும் இருந்தது. பயிரிடுகைக்குள்ளான மொத்தக் காணியின் 27 சதவீதமாகியிருந்தது.

(ஆ) 2002 ஆம் ஆண்டில் ஆரம்பமாகிய II ஆம் கட்ட வேலைகளில் ஆரம்பத்தில் ஏற்பட்ட 32 உடன்படிக்கைகளில் 09 உடன்படிக்கைகளின் வேலைகளே 08 ஆண்டுகளின் பின்னரும் நடைபெற்றவாறிருந்ததுடன், பயிரிடப்பட்ட 511 ஹெக்டயர்களில் தற்போது 311 ஹெக்டயர்கள் வரை குறைவடைந்த காணியே தற்போது பராமரிக்கப்பட்டு வருவதும் புலனாயிற்று. அது பயிரிடப்பட்ட மொத்த அளவில் 61 சதவீதமாகும்.

(இ) ஒட்டுமொத்தமாக, செயற்திட்டத்தின் மொத்த பயிரீடு ஆரம்பிக்கப்பட்ட 1017 ஹெக்டயரில் தற்போது 448 ஹெக்டயாரே தனியார் துறையினரால் பராமரிக்கப்பட்டவாறிருந்தன.

(ஈ) தனியார் துறை பங்களிப்புடனான வனப் பயிரிடுகைச் செயற்திட்டம் தோல்வியைத் தழுவியிருந்தது. பயிரிடப்படாது உள்ள காணியை முறையாகப் பராமரிப்பது சம்பந்தமாகவும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தனியார் துறையினர் பராமரிக்கும் மட்டுப்படுத்தப்பட்ட காணியின் அளவானது எதிர்வரும் 20 ஆண்டுகளின் போது முறையாகப் பராமரிக்கப்படுவது சம்பந்தமாகவும் முறைப்படி வேலைத்திட்டங்கள் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

அம்பாறை மாவட்டத்திலும் வனப்பிரதேசங்களிலும் கருங்கற்களை உடைப்பதற்குத் தனிப்பட்டவர்களுக்கு அனுமதி வழங்குகையில் விண்ணப்பதாரிகளுடன் உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டிருந்தன. அவ்வுடன்படிக்கைகளை குறிப்பிட்ட நிபந்தனைகள் மீறப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 2.9 முகாமைத்துவ நலிவுகள்

கீழே குறிப்பிடப்பட்ட நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகள் அரசாங்கக் கணக்குக் குழுவால் பரிசீலிக்கப்பட்டதையடுத்து பின்தொடர் நடவடிக்கைகள் முடிவுறாதிருந்த பந்திகள்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு

| ஆண்டு | பந்தி இலக்கம் | குறித்த விடயம் |
|---|---|---|
| 2008 | 4.3(ஆ) | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குக் கடன் |
| 2009 | 4.3(ii) | மீதிகளை அறவிடும் தொடர் நடவடிக்கைகளில் உள்ள நலிவுகள் |
| 2010 | 1.3(ஈ)(i) | |
| 2008 | 4.3(இ) | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு |
| 2009 | 4.3(i) | தனிப்பட்ட மீதிகளை வகைப்படுத்தும் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் |
| 2010 | 1.3(ஈ)(ii) | கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளுக்கிடையே வேறுபாடு தொங்கற் கணக்கிற்கு மாற்றஞ் செய்யப்படலும் தீர்த்து வைக்கப்படாமையும் |
| 2010 | 1.7(i) | சாரதிகளை ஆட்சேர்ப்பதில் தாமதம் |
| 2010 | 1.12(ஊ) | நிலையான சொத்துப் பதிவேட்டைத் தயாரிக்காமை |

### (ஆ) வன விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பலா மரங்களை உற்பத்தி செய்தல்

---

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2012 ஆம் ஆண்டிற்கான வன விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமைச்சின் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி 250,000 பல மரங்கள் உற்பத்தியாகின. அதில் 129,215 அதாவது உற்பத்தியில் 52 சதவீதம் 2013 ஏப்ரல் 03 அன்றும் எஞ்சியிருந்தன.

(ii) வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளால் பலாச் செடிகளைப் போன்ற விருட்சங்கள் வன விரிவாக்கலுக்குப் பயன்படுத்தப்பட முடியாதன என்பதால், அச்செடிகளை பொது மக்களிடையே வீட்டுப் பயிர்ச் செய்கைக்கு விநியோகிப்பது தொடர்பான திட்டமொன்று தயாரிக்கப்பட வில்லை.

(iii) இச்செடிகள் பைகளில் அடைக்கப்பட்டு ஏறக்குறைய ஓராண்டாகி விட்டமையால் அவை பெருமளவு வளர்ந்து அதன் காரணமாக, அவற்றைப் பராமரிப்பது கடினமாகியிருந்தது.

(இ) பல்வேறு நிறுவனங்கள் / நபர்களால் அமுலாக்கப்படும் வனப் பயிரிடுகைச் செயற்திட்டங்களுக்குத் தேவைப்படும் பல்வேறு வகையான 5,000 க்கும் மேற்பட்ட நாற்றுக்களை வன பாதுகாப்புத் திணைக்கள நாற்றுப் பண்ணைகளில் வளர்த்து அவற்றை எதிர்பார்த்திருக்கும் பயிரிடுவோருக்கு விநியோகிக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று 2011 ஆம் ஆண்டில் ஆரம்பமாகியபோதும் அதுவும் தோல்வியிலேயே முடிவடைந்தது.

(ஈ) வன பாதுகாப்புத் திணைக்களம் உற்பத்தி செய்யும் செடிகளது விற்பனையால் 2010,2011,2012 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 7,092,121 ரூபா 6,097,292 ரூபா 6,934,353 எனக் குறிப்பிடத்தக்க வருவாய் கிட்டியபோதும், செடிகளது விற்பனைக்கு முறையான நடைமுறையொன்று வனப் பாதுகாப்பு நாயகத்தால் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வன விரிவாக்க நிகழ்ச்சித்திட்டமானது பாடசாலைகளுக்கும் அரச நிறுவனங்களுக்கும் கட்டணமின்றி நாற்றுக்களை வழங்குவதில் மிகுந்த கவனம் மேற்கொண்ட போதும், வனப் பாதுகாப்புத் திணைக்களம் நேரடியாக

மேற்கொள்ளக்கூடிய பாதையின் இருமருங்கிலும் செடிகளை நடுதல் மற்றும் வரம்புகளிலும் நீர்ப்படுகைகளிலும் செடிகளை நடுதல் போன்ற செயல்களில் குறைந்த கவனமே செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) தலைமை அலுவலக நாற்றுக்கள் மற்றும் பிரசுரங்கள் என்பனவற்றை விற்பனை செய்யும் நிலையம் பரிசீலிக்கப்பட்ட போது அங்கு பணச் சேகரிப்பு, நாற்றுக்களது கையிருப்புப் பதிவேடு பேணப்படுதல் என்பன முறையாக நடைபெறாமை புலனாயிற்று. மேலும் விற்பனையின் பெறுமதி அடங்கிய கூற்று பதிவு செய்யப்படாமையும் உள்ளகக் கட்டுப்பாட்டில் நிலவும் நலிவால் நிதி மோசடி ஏற்பட வாய்ப்புண்டு என்பதும் புலனாயிற்று.

(எ) பொகவந்தலாவையில் வணிக ரீதியாக மரந்தரிக்கும் வெபல்டன் காணிகளில் அத்துமீறிய மரத்தரிப்பு

2010 ஆம் ஆண்டில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட நுவரேலியா மாவட்டத்தின் 10 ஹெக்டேயர் கிறான்ட்ஸ் வனப் பயிர்களது வணிக ரீதியான மரத்தரிப்பின் போது 505 மரங்கள் மோசடியாகத் தரிக்கப்பட்டமையால் ரூபா 32,642,148 மற்றும் 30 பெரிய மரங்கள் அழிவுக்குள்ளாகியமையால் அரசிற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 872,395 ஆகும். என நுவரேலியா மாவட்ட வன உத்தியோகத்தரது பரிசீலனை மூலம் புலனாயிற்று 2013 ஜுன் 21 அன்று அம்மோசடி நடைபெற்று 18 மாதங்களுக்கு மேற்பட்ட போதும், அவ்வன அழிவு தொடர்பாக ஆரம்ப விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உதவி வன பாதுகாவலர் ஒருவரையும் வனப் பாதுகாவலர் ஒருவரையும் வனப்பாதுகாப்பு பணிப்பாளர் நாயகம் பணித்திருந்தார். 2013 ஆகஸ்ட் 01 வரை பரிசீலனை அறிக்கையானது வனப் பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நகல்ஸ் பாதுகாப்புப் நிலையத்தின் நிர்மாணப் பணிகள்

சேர எல்லவுடன் இணைந்த நிர்மாணப் பணிகள்

நகல்ஸ் பாதுகாப்பு நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்கு ரூபா 11,797,532 க்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. நிர்மாணப் பணி நியமங்களுக்கு அமைய நடைபெறவில்லை.

சிரேட்ட பிரதி வனப் பாதுகாவலர் (சுற்றாடல் முகாமைத்துவம்) தனது 2009 செப்தெம்பர் 16 ஆந் திகதிய EMD/ECO.Dev/Knck/2009 எனும் கடிதத்தின் மூலம் நிர்மாணப் பணி மேற்பார்வைக்குத் தகுதிவாய்ந்த அரச தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரது சேவையைப் பெற்றுத்தருமாறு மாத்தளை மாவட்ட வன உத்தியோகத்தாருக்கு அறிவித்திருந்த போதும், அவ்வாறு தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சேவையைப் பெற்றுக் கொண்டதற்கான சான்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ரூபா 692,871 கூட்டுத்தொகையுடைய செலவினம் தொடர்பாக கொடுப்பனவு உறுதிச்சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) ஏனையவை

---------------------------

(i) வனப் பாதுகாவலர் (ஆளணியும் நிர்வாகமும்) திருகோணமலை மேலதிக மாவட்டச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் சட்டத்திற்குப் புறம்பாக அரச வாகனம் ஒன்றைச் செலுத்தி அது விபத்திற்குள்ளாகியிருந்தது. அவ்வாகனத்திற்கு ரூபா 484,252 இழப்பை ஏற்படுத்திய உத்தியோகத்தரிடம் அந்த இழப்பை அறவிடத் தீர்மானித்த போதும், உத்தியோகத்தர் கொடுப்பனவைப் புறக்கணித்திருந்தார். அந்த உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2008 ஜுன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மாதாந்தம் ரூபா 30,000 போக்குவரத்துப் படியாகவும் ரூபா 20,865 எரிபொருள் படியாகவும் பெறும் வனப் பாதுகாவலர் (ஆளணியும் நிர்வாகமும்) சட்டத்திற்குப் புறம்பாகத் திணைக்கள வாகனத்தையும் பயன்படுத்தியிருந்தார்.

## 2.10 மனித வள முகாமைத்துவம்

-------------------------------------------

### (அ) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை

-----------------------------------------------------------------------------------------

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிட |
|---|---|---|---|

| | | ஊழியர் எண்ணிக்கை | ஊழியர் எண்ணிக்கை | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட நிலை | 84 | 48 | 36 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 42 | 31 | 11 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 1383 | 960 | 423 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 1609 | 1218 | 391 |
| | மொத்தம் | 3118 | 2257 | 861 |

பின்வரும் அவதானிப்புரை மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டு முடிவிலான 861 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முறையற்றவாறு பிற நபர்களுக்கு விடுவித்த மனிதவளம்

திணைக்களம் மீளாய்வாண்டின் போது பிற நபர்களுக்கு முறையற்றவாறு விடுவித்த மனித வளம் தொடர்பான விபரம் கீழே காணப்படுகின்றது.

| | ஊழியர் வகை | ஊழியர் எண்ணிக்கை | மனிதவளம் வழங்கப்பட்ட நிறுவனம் | விடுவிக்கப்பட்ட காலப் பகுதி |
|---|---|---|---|---|
| (i) | வன உத்தியோகத்தர் | 01 | சுற்றாடல் மற்றும் புனரமைப்பு வலு அமைச்சு | 2008.01.01 முதல் அறிக்கைத் திகதி வரை |
| (ii) | வனக்கள உதவியாளர் | 03 | சுற்றாடல் மற்றும் புனரமைப்பு வலு அமைச்சு | 2008.01.01 முதல் அறிக்கைத் திகதி வரை |